

சேலம் மத்திய மாவட்டக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 28.10.2026 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக்கழக அலுவலகம் "கலைஞர் மாளிகை"யில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜி.கே.சுபாசு முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன், கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி, பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து தி.மு.க . மகளிர் அணி சார்பில் 31.10.2026 அன்று நடை பெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் நிர்வாகிகள் மற்றும் பெண்கள் அனைவரும் பெரும்திரளாக தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றியக் கழக செயலாளர்கள். பகுதிகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள் செயலாளர்கள், மாநகரத்தில் உள்ள வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

பெண்களின் பாதுகாப்பு முதல் மின்பற்றாக்குறை வரை - தவெக அரசைக் கண்டித்து

அக். 31-ல் திருவள்ளூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணியினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் வேண்டுகோள்!



திருவள்ளூர் அக் 29

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் ஆவடியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பல் வேறு ஆலோசனை வழங்கினார் அப்போது பேசிய அவர் பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு சீர் கேடு, போதைப்பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு மற்றும் மின்பற்றாக்குறை உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளைக் கண்டித்து, தி.மு.க. தலைமைக்கழக அறிவிப்பின்படி, அக்டோபர் 31-ஆம் தேதி தமிழகம் முழுவதும் மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. அதன்படி, ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், வரும் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவும், விலைவாசி உயர்வைக் குறைக்கவும், தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிசெய்யவும் அரசுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எனவே, மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் அனைத்து அணிகளைச் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும்

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டம் முழுவதும் "எளியோர் எழுச்சி நாள்" விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏழை, எளிய மக்களின் நலனை முன்னிறுத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்குதல், ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு வழங்குதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல், மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலப் பணிகளை முன்னெடுத்து, பிறந்தநாள் விழாவை மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாகக் கொண்டாடிட வேண்டும்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து மாநகர ஒன்றிய, நகர, பேரூர் பகுதி மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளைமக்கள்திருவிழாவாகக் கொண்டாடிட வேண்டும். இதில் ஆதிதிராவிட நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் மா. ராஜி, சி.ஜெரால்டு, எஸ். ஜெயபாலன், பா. நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், வி. முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர், மற்றும், மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மூலக்கடையில் நடைபெற்ற,பெரம்பூர் தெற்குப் பகுதி 44- ஆவது வட்டக் கழகச் செயலாளர்,சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம்- ஆ.இராசலட்சுமி இணையரின் மகள் ஆ.தமிழ்பொன்னி- கு.விக்னேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.உடன் சட்டத் துறை துணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான்,கழகத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பிடிசி.வெ.பாலு,அறிவாலயம் கார்த்திக், சேலம் வடிவேல், எம்.டி.சி. (தொ.மு.ச) எம்.சுந்தரமூர்த்தி,எம்.விநாயகமூர்த்தி, பகுதிப் பிரதிநிதி ப.பிரதீப், தொ.மு.ச. ஜே.அரிதாஸ், எஸ்.பிரதாப் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

வில்லிவாக்கம் 95 வது வட்ட அவைத் தலைவர் - தி.மு.க. ஐ.சி.எப். லேபர்

யூனியன் பொருளாளர் கே.தமிழ்வாணன் (எ) நேரு பணி நிறைவு பாராட்டு விழா!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 29

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 95 வது வட்டக் கழக அவைத் தலைவரும், தி.மு.க. ஐ.சி.எப். லேபர் யூனியன் பொருளாளர் தே.தமிழ்வாணன் (எ) நேரு பணி நிறைவு பாராட்டு விழா இன்று (29.10.2026 - வியாழக்கிழமை) காலை 11.45 மணியளவில், ஐ.சி.எப். முத்தமிழ் அரங்கத்தில் நடைபெறுகிறது.

தி.மு.க. ஐ.சி.எப். லேபர் யூனியன் பொதுச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன் தலைமை வகிக்கிறார்.

கே.ரமேஷ், மா.அகிலன், ஏ.சத்திய பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ந.கலையரசன், மாத்தூர் கா.விஜயகுமார், எஸ். ஜெயகுமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வாழ்த்துகிறார்.

இவ்விழாவில் தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், அ. வெற்றிஅழகன், கூ.பி. ஜெயின், வே.வாசு, வி.பி.ஜவஹர்பாபு, எல்.பி.எஃப். ஆர்.வரதன், சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன், வான வில் விஜய், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, ப. இளையா, ம. கலைச்செல்வி, எம்.சுரேஷ்பாபு,

வட்டக் கழகச் செயலாளர்கள் பா.ஜானி, சிட்கோ சேகர், க.சுகுமாரன், ஆர். தீனதயாளன், ப.லோகு பாபு, செ.முருகேசன், கே. எஸ்.பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் கோ. மணிவேந்தன், க.மணிமாறன், 95 வது வட்டக் கழக நிர்வாகிகள் தா.டில்லி, சி.தில்லை வாணி, கோ.மதிவாணன், கே. இளங்கோவன், ஜெ.கருணாமூர்த்தி, எஸ். விஸ்வநாதன், க. விமலநாதன், சே.திலீப்குமார், து.ஜெஸ்டின், வி.து.குபேந்திரன், பி.துரைராஜ், எஸ். ஆனந்தராஜ், ஆர்.சிவசாமி, பி.ராஜேந்திரன், வே.இன்பராசன்,

ஐ.சி.எப்.லேபர் யூனியன் நிர்வாகிகள் எம்.கே. பி.உதயசூரியன், பி.பொற்செழியன், எம்.திருப்பதி, வி.து.ராஜா, ஆர்.மாறன், எம்.சாரங்கபாணி, இ.கபிலன், பி.மாசிலாமணி, ஆர். ரகுபதி, கே. தாமரைச்செல்வன், வி.சிறுகடல் ரவி, கே. முரளிதரன், சி.குமரேசன், எஸ்.சங்கர், ஜி.வல்சன், கே. ராஜசேகர், ஏ.டி.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

குடும்பத்தினர் டி.மதிவாணன் - கவிதா, டி.சரத்குமார் - எஸ்.ரம்யா, ஏ. நசூர்தீன் - டி.ஜனனி பிரித்தா, எஸ்.ஆர்.தன்மையா, என்.ஜெ.சாத்விக் அயன் ஆகியோர் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றனர்.

வெ.சு.சத்தியநாராயணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் வெ.சுந்தரராஜன் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி! நலஉதவிகள்!

அன்பகம் கலை - ஆர்.டி.சேகர் வழங்குகிறார்கள்! கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை அக்.29

ஆர்.கே.நகர் முன்னாள் பகுதி செயலாளர் வெ.சுந்தரராஜன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழகத்தினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (30.10.2026 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தண்டையார் பேட்டை மார்க்கெட் எல்லைமுத்தம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர்அணி துணை அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர், பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர். வெற்றி வீரன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, இர.பொன்இளவரசன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிக்குமார், லயோலா கே.மதன், வை.கௌதமன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, மு.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், என். எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப. குமார், ச.தமிழ்ச்செல்வன், ஜெ.பிரேம்ஆனந்த், எம். எம்.சாமி, பி.கே.மூர்த்தி, ஆர்.ரமேஷ், பி.அன்பழகன், வி.முத்து, கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், மா.ரூபசங்கர், எரிமலை பி.எல்.பாலு, பா.நரேஷ்குமார், வி.ஞான சேகரன், சி.மணிகண்டன், த.அறிவழகன், வட்ட செயலாளர் பொ.து.ராஜா, பவித் ராநரேஷ்குமார் எம்.சி, மோ.ரவிக்குமார், பிரசிடென்சி.சி.சதீஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்திஸ் வரி, சே.அரிஷ்குமார், வெ. கார்த்தி, நு.அப்துல்மாலிக், கூல் ஜோன் ச.சுரேஷ், அ.ராஜ் குமார், வண்ணை தேவகி ச. சண்முகம், ம.மதன்குமார், ரா.விஜயவர்மன், ஜே.எ. சாலமன், மு.முகமது தாஜீதின், டி.லோகேஷ், ஆகியோர் துவக்கவுரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, தூத்துக்குடி எஸ்.ஜோயல், ஆகியோர் நலஉதவிகள் வழங்குகின்றனர்.

தா.இளையஅருணா, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ந. மனோகரன், இரா.கருணாநிதி, இரா.மதிவாணன், என்.மருதுகணேஷ், பி.டி. பாண்டிசெல்வம், இரா. நரேந்திரன், ஜெ. வசந்தகுமார், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, வி.தயாளன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், க.ஜெயராமன், அ.முருகன், வே.சிவக்குமார், நா.சண்முகம், சு. சேகர், கி.ராஜேந்திரன், ப.மதிவாணன், ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், க.அமுலு, டி.வி.முத்துக்கிருஷ்ணன், கு. நற்குணம், எஸ்.பி.எஸ்.புத்தன்,தமிழ்கொடி,ரெயின்போ என்.விஜயகுமார்,

ஏ.டி.மணி, ஓலி ஒளி ஆ..பாபு, வி.வி.ரமேஷ், எஸ்.எம்.பரசுராமன், டாக்டர் வை.கலைவாணன், விமலாமோகன், லட்சுமி வேலு, லயன் எம்.தீனதயாளன், லியோ டி.சுரேஷ், பி.செந்தில்குமார், கார்த்திக் செங்குடுவன், ஜி.பி. மோகன்பாபு, த.சிவராமன், மு.அப்துல்ரகுமான், கூல் பாயிண்ட் பா.பிரகாஷ், கோ.சதீஷ், வெ.இன்பரசன், கே.கலையரசன், அ. மோகன், க.கோவிந்தசாமி, ஜி.சதிஷ்குமார், ஜே.கே. நாதன், மாமன்ற உறுப்பினர்கள் க.தேவிகதிரேசன், குமாரிநாகராஜன், மணிமேகலை ஏழுமலை, மாஸ் டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எம்.லோகநாதன், தா.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், கு.ரமேஷ், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி. ஏழுமலை, ஆர்.ராஜன், இரா.பாலன், க.கலைச்செல்வன், எஸ்.ரமேஷ், எஸ். சொக்கலிங்கம், ஜி. முகுந்தன், ஜி.ராஜா, டி.சங்கர், உள்ளிட்ட கழகத்தினர், ஏ. வெங்கடேஷ், ஜெ.ஜான்பி ராங்க்ளின், எம்.கிளை மென்ட்ராஜ், ஆர்.ராதிகா,

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: வெ. நந்தகோபால், ஜெ.சுரேஷ்பாபு, ஜெ. துரைபாபு, மு.பாலமுருகன், பா.அரிகிருஷ்ணன், ஆர்.சந்தோஷ் ஆர்.பாபு, பி.சதீஷ், பி.வி.கௌதம், பி.கார்த்திக், த.மாறன், எஸ்.அரசு, இரா.கண்ணன், ஜி.ஞானகிராமன், ஜி.பிரபாகரன், ஜி.உமாபதி, கொரியர்.எம்.முருகன், கா.ரீதர், மா.சண்முகம், மலர் எம்.பிரவீன்குமார், பா.சக்திதாசன், ரோ.கெவின், சா. தேவேந்திரன், கோ.சாய்மகேஷ், ஜி.பால்ராஜ், எம்.ஐயப்பன், தியாகு, ஜெ.சாய்தினேஷ், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு : வெ.சு.பிரபாகரன், வெ.சு. சத்தியநாராயணன், ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. மகளிர் அணியினர்

உதகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிக்கை!

நீலகிரி, அக். 29

அமைதிப் பூங்காவான தமிழ்நாடு இன்று குற்றவாளிகளின் புகலிடமாக மாற்றப்பட்டுள்ளது. அதிகாலையில் அன்றாடம் செய்தித்தாள்களைத் திறந்தால் கொலை, கொள்ளை, வழிப்பறி மற்றும் போதைப்பொருட்களின் நடமாட்டம் குறித்த செய்திகளே ஆக்கிரமித்துள்ளன. காவல் துறையின் கைகள் முற்றிலுமாக கட்டப்பட்டு, சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக முடங்கி, பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித பாதுகாப்பும் இல்லாத அவல நிலை இன்று தமிழ் நாட்டில் நிலவுகிறது.



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்" போற்றப்பட வேண்டிய இந்த மண்ணில், இன்று த.வெ.க அரசின் அவலத்தால், பள்ளிக் குழந்தைகள் முதல் பணிக்குச் செல்லும் பெண்கள் வரை சமூக விரோதிகளால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண் குழந்தைகளும், பெண்களும் வீட்டை விட்டு வெளியே சென்று பாதுகாப்பாக வீடு திரும்புவது பெரும் சவாலாக மாறியுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான த.வெ.க அரசின் அலட்சியப் போக்கும், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தவறும் நிர்வாக சீர்கேடே இந்த பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு காரணமாக உள்ளது.

ஒருபுறம் பாதுகாப்பற்ற சூழல் என்றால், மறுபுறம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் அத்தியாவசிய பொருட்களான விலைவாசி உயர்வு. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

த.வெ.க., அரசு தமிழகத்தில் ஆட்சி பொறுப்பில் அமர்ந்த நாள் முதல் ஒவ்வொரு இல்லத்தரசிகள் ஒவ்வொரு நாளும் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து, தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

இந்நிலையில், நமது உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாக நிற்கவும், திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, மகளிர் அணி பொறுப்பாளர் கழக துணை பொது செயலாளர் மாண்புமிகு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி MP., அவர்கள் ஆலோசனைப்படியும் நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் எதிர்வரும் 31-10-2026 சனிக்கிழமை காலை 11 மணியளவில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆர்பாட்டத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக மகளிர் நிர்வாகிகள், அனைத்து மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், இன்னாள்-முன்னாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொண்டு ஆர்பாட்டத்தை வெற்றி பெற செய்திடவும், இவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்புடைய நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள் சிறப்புடன் செய்திடவும் வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜூ எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பின்மை, விலைவாசி உயர்வை கண்டித்து வரும் 31.10.2026 அன்று நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்த, சென்னை மேற்கு மாவட்ட திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியின் ஆலோசனை கூட்டம் நேற்று (28.10.2026) நுங்கம்பாக்கம், காம்தார் நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில மகளிர் அணி நிர்வாகிகள் குமரி விஜயகுமார், ரத்னா லோகேஸ்வரன் மற்றும் டாக்டர் யாழினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் மகளிர் அணி மற்றும் தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன், டி.கே. லதா ஃபிளாரன்ஸ் உள்ளிட்ட மாவட்ட, பகுதி மற்றும் வட்ட அளவிலான மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வடுவூர் இரா.சாமிநாதன்

அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.